**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. STC.No. 67 of 2021**

**Prosecution Witness: PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : விஜயமூர்த்தி | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

Dated. 20.08.2025

**(Accused absent. Petition filed u/s.317 crpc and allowed.)**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் புகார்தாரராவேன். நான் எதிரிக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். 13.06.2014 தேதியிட்ட Partnership deed (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்) **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கும், எதிரிகளுக்கும் இடையே ஏற்பட்ட ஸ்டாக்கிஸ்ட் ஒப்பந்தம் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்) **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.12.2015 தேதியிட்ட காசோலை (எண். 000227) (அசல்) **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.01.2016 தேதியிட்ட காசோலை (எண். 000228) (அசல்) **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.02.2016 தேதியிட்ட வங்கி குறிப்பாணை (அசல்)

**ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.02.2016 தேதியிட்ட வங்கி குறிப்பாணை (அசல்) **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.03.2016 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு (அலுவலக நகல்) **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.03.2016 தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை (எண்ணிக்கை 2) (அசல்) **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி இருப்பதால் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக **09.09.2025** அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.08.20 17:11:26 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி